[1992 ஏப்ரல் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 461, திரு. ம. சின்னசாமி (குறுக்கீடு) சரி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

461—

மருத்துவர்கள் வெளிநாட்டுப் பணிக்குச் செல்வதை தடை செய்தல்.

*6229 திரு. ம. சின்னசாமி :

மாண்மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மருத்துவர்கள் வெளிநாட்டுப் பணிக்குச் செல்வதைத் தடை செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வெளிநாடு செல்லும் மருத்துவர்களை அரசு தடை செய்யுமா என்று கேட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர், நான் வெளிநாடு சென்றுவிட்டதாக எண்ணி, இருக்கையில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கீழே குனிந்து கொண்டிருந்தீர்கள்.

திரு. ம. சின்னசாமி : தலைவரவர்களே, ஒரு மருத்துவரை உருவாக்குவதற்கு அரசு பல லட்சக் கணக்கில் செலவு செய்கிறது. இப்படி பல லட்சம் ரூபாய்களை விழுங்கிவிட்டு, மருத்துவர்களாகப் படித்து முடித்துவிட்டு வருபவர்கள், நாட்டு மக்களுக்குப் பணியாற்றுவதை விட்டுவிட்டு, வெளி நாடுகளுக்குச் சென்று விடுகிறார்கள். இது ஒரு தேசிய நஷ்டம். இந்த முறைகேட்டைத் தடுப்பதற்கு அரசு இனிமேலாவது முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், இது தேசிய நஷ்டமல்ல; தேசியத்திற்கு ஒரு லாபகரமான காரியம். காரணம், இது அன்னியச் செலாவணியை ஈட்டு கிறது. படித்தவர்கள் நம்மிடம் இல்லை என்று சொன்னால், போதிய அளவுக்கு, நமக்குத் தேவையான அளவுக்கு நபர்கள் இல்லை என்றால், நாம் அனுப்புவதில்லை. ஏற்கனவே அரசு உத்தியோகத்தில் சேர்ந்து, பணியாற்றிக் கொண்டிருப் பவர்களுக்கு வெளிநாடுகளிலே வாய்ப்பு கிடைத்தால் 5 ஆண்டுகள் அவர்களுக்கு விடுமுறை கொடுக்கப்படுகிறது. அவர்கள் சம்பளம் இல்லாத விடுப்பில் சென்று, அங்கே அந்தப் பணியை ஆற்றிவிட்டு திரும்பி வந்துவிட வேண்டு மென்ற முறையிலேதான் நாம் இப்போது செய்துகொண்டிருக் கிறோம். அதிலேகூட அனெஸ்திஷியா போன்ற மிகவும் ஸ்கேர்சிடி இருக்கின்ற துறைகளில் இருந்து யாரையும் அனுப்புவதில்லை. எனவே இவர்கள் சென்று வருவதைப் பொறுத்தவரையில் நாட்டுக்கு நல்லது என்றுதான் கருது கிறேன். இன்னும் சொல்லப்போனால் அவர்கள் சிறப்பாகப் பெற்ற பயிற்சிகளை இங்கே வந்து பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளும் நமக்குக் கிடைக்கிறது.

முற்பகல் 9-50

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில டாக்டர்கள் வெளிநாடுகளிலே நிரந்தர மாகத் தங்கிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்போய் தங்கவேண்டுமென்ற நிலையில் இருப்பவர்கள், அரசாங்கத்தின் பதவியை ராஜிநாமா செய்துவிட்டுப் போனால் இந்தப் பிரச்சினையே இல்லை. நம்மைப் பொறுத்தவரையில் படித்தவர்கள் எவ்வளவு பேருக்கு இங்கே வேலை கொடுக்க முடியுமோ அவ்வளவு பேருக்கும் வேலைவாய்ப்புக் கொடுக் கிறோம். முடியாதவர்கள் வெளிநாடுகளில் என்ன, சந்திர மண்டலத்திலே போய் வேலை செய்தால் கூட நாம் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். எனவே அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய அனுமதி இல்லாமல் போனால் தவறு. அல்லது கொடுத்த காலத்திற்குமேல் அங்கே தங்கியிருந்தால் தவறு. அதற்கு மேல் அவர்களுக்கு அங்கே வாய்ப்பு சிறப்பாக இருக்கிறது என்று அவர்கள் கருதினால் அரசாங்கப் பதவியை ராஜிநாமா செய்துவிட்டால், அவர்களை நாம் தாராளமாக அனுமதிக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, மருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கு அரசு அதிகபட்சமாக செலவு செய்தாலும் கூட, சிறந்த பயிற்சி பெற்ற நிபுணத்துவம் உடைய டாக்டர்களை உற்பத்தி செய்தும், இங்கே அவர்களுக்கு வேலையில்லாத பிரச்சினை இருக்கிறபடியால், வெளிநாடுகளுக்கு அவர்கள் செல்ல அனுமதிப்பதன் மூலம் நமக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. அவர்களுக்கு செலவு செய்த பணத்தைத் திரும்பப் பெறுகின்ற வகையில், வெளிநாடுகளில் இருக்கின்ற நமது டாக்டர்கள் அரசுக்கு ஆண்டொன்றுக்கு இவ்வளவு தொகை கொடுக்கவேண்டுமென்ற நிலையை உருவாக்கி அதைச் சரி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு வருமானம் வருவதற்கு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையைச் சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அது சரியாக இருக்காது, அவர்களே வெளிநாடுகளுக்குப் போய் சிரமப்பட்டுத்தான் சம்பாதிக்கிறார்கள், எனவே அவர்கள் தலையில் கை வைப்பது நியாயமாக இருக்காது என்று கருதுகிறேன். நியாயமாகப் போடப்பட்டு முறைப்படி அரசாங்கத்திற்குக் கட்டவேண்டிய வரிகளை ஒழுங்காகக் கட்டினாலே இந்தப் பிரச்சினை நமக்கு இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 492, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

462—

சதுப்பு நிலத்தில் சமூகக் காடுகள் வளர்ப்பு.

*5825—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தேயிலைத் தோட்டங்களிலுள்ள சதுப்பு நிலத்தில் சமூகக்காடுகள் வளர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS